DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.100/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | விக்னேஷ் | **Rw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 31st day of January 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்தை நான் நேரில் பார்க்காததால் இந்த விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் மூலமாகத் தெரியும். இந்த விபத்து சம்பந்தமாக ஸ்ரீராம் என்பவர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார். 21.07.2021ல் நண்பகல் 12.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காயச்சான்றிதழ், விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றின் வாயிலாக 21.07.2021 தேதியன்று சங்கர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகத் துலங்கும் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. சங்கரும், சொக்கலிங்கமும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததை பயன்படுத்திக்கொண்ட ஸ்ரீராம் தனக்கு சாதகமாக புகார் அளித்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. மேலும் ஸ்ரீராம் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்துவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறு புகார் அளித்திருக்கிறார் என்றால் சரியல்ல. ஸ்ரீராம் டிஎன் 79 ஜே 6176 என்ற வாகனத்தில் சிமெண்ட் லோடு ஏற்றிச் சென்றதாகத்தான் முதல் தகவல் அறிக்கையில் துலங்குகிறது என்றால் சரிதான். இந்த முதல் தகவல் அறிக்கையில் இருந்து டிஎன் 79 ஜே 6176 என்ற வாகனத்தின் பின்னால் டிஎன் 79 ஹச் 3557 பதிவெண் கொண்ட ஆட்டோ மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தெரியவருகிறது என்றால் சரிதான். எனவே பின்னால் வந்த சங்கர் இந்த விபத்தை பார்க்க இயலாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் சரியல்ல. நேரான ரோடாகும். முன்பாக வளைவுப் பகுதி தான் உள்ளது என்றும், அதனால் சங்கர் மெதுவாகத்தான் வந்தார் என்றாலும் சரியல்ல. சங்கர் 3 சக்கர வாகனத்தில் வந்ததால் 40 கி.மீ வேகத்தில் வந்திருக்கிறார் என்றால் சரியல்ல. ஸ்ரீராம் காவல் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று புகார் அளித்திருக்கிறார் என்றால் சரிதான். சங்கரின் 3 சக்கர ஆட்டோவின் முன்புறம் தான் சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்பது மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் மூலமாக துலங்குகிறது. சங்கர் ஆட்டோவை மெதுவாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. குற்றவியல் நடவடிக்கையில் அபராதம் செலுத்தியதாகக் கூறினாலும், அது இந்த தீர்ப்பாயத்தைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. காவல் துறை கட்டாயத்தின் பேரில் அவருக்கு கல்வியறிவு இல்லாததால் அபராதத்தை செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. இந்த மனுவானது மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 163(ஏ)ன் கீழ் தாக்கல் செய்திருப்பதால் கவனக்குறைவு என்ற எதிர்வாதத்தை அனுமதிக்க இயலாது என்றால் சரியல்ல. எம்சிஓபி.மனு எண்.99/2022 வழக்கு பிரிவு 166ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் நிறுவனத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த விபத்து சம்பந்தமாக எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட லாரியின் ஓட்டுநரையோ, அல்லது விபத்தை நேரில் பார்த்ததாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு சாதகம் இல்லாத தனிநபர் சாட்சி யாரையும் நாங்கள் விசாரணை

செய்திருக்கிறோமா என்றால் விசாரிக்கவில்லை. அடுத்ததாக விசாரிக்கப்போகிறோம். எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் கனரக வாகனம் என்றால் சரிதான். லாரி ஓட்டுநர் தன் மீது குற்ற நடவடிக்கை வந்துவிடக்கூடாது என்பதற்காக தாமாக சென்று புகார் அளித்திருக்கிறார் என்றால் சரியல்ல. குற்ற வழக்கு நடவடிக்கைகள் மோட்டார் வாகனத் தீர்ப்பாயத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தீர்ப்பாயத்தில் முன்னிலைப்படுத்தப்படும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாகத்தான் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். இந்த 2 வழக்குகளிலும் உள்ள மனுதாரர்கள் எங்கள் காப்பீடு கழகத்தைப் பொறுத்தவரை 3ம் தரப்பினர்கள் என்றால் சரியல்ல. பிரிவு 163(ஏ)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வாகனத்தை பயன்படுத்தாத நபர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். இந்த 2 வழக்குகளிலும் உள்ள மனுதாரர்கள் 3ம் தரப்பினர்கள் என்பதாலும், எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் விபத்தில் ஈடுபட்டதாலும் நாங்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை ஆகியவை மனுதாரர் தரப்பு வாகனத்தின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளதால் நாங்கள் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை. காயமடைந்த நபர் மரணத்தின் விளிம்பில் இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு 1ம் எதிர்மனுதாரர் அவருக்கு சாதகமாக புகார் அளித்திருக்கிறார் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA Date: 2024.01.31 17:52:21 +0530